MINISTRY OF
MANPOWER

# குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கான பண நிர்வாக வழிகாட்டி





# அறிமுகம்

சிங்கப்பூரில் வருமானம் ஈட்டும் ஒரு பணிப்பெண்ணாக, நீங்கள் கடினமாக உழைத்துச் சம்பாதித்த பணத்தைச் சேமிப்பது முக்கியம், இதன் மூலம் உங்களையும் உங்கள் தாய்நாட்டில் வசிக்கும் உங்கள் குடும்பத்தையும் ஆதரிக்க முடியும்.

இந்த வழிகாட்டியில், உங்கள் நிதிப் பாதுகாப்புப் பயணத்தைத் தொடங்குவதற்கான எளிய வழிமுறைகளையும், பயனுள்ள ஆலோசனைகளையும் நீங்கள் காணலாம்.

** அச்சிடும் நேரத்தில் தகவல் சரியானது*



# உள்ளடக்கம்



## பகுதி I:
### உங்கள் இலக்குகளை அமைத்திடுங்கள்


உங்கள் கனவுகளைக் கற்பனை செய்து பாருங்கள் — 06

S.M.A.R.T. இலக்குகளைத் தேர்ந்தெடுக்கவும் — 08

உங்கள் மாதாந்திர சேமிப்பு இலக்கை அமைக்கவும் — 10


## பகுதி II:
### சேமிப்பைத் தொடங்க ஒரு திட்டத்தை உருவாக்கவும்


உங்கள் “தேவைகள்” மற்றும் “விருப்பங்களைத்” தெரிந்துகொள்ளுங்கள் — 12

உங்கள் செலவினங்களின் பதிவை வைத்திருங்கள் — 13

ஒரு வரவுச்செலவுத் திட்டத்தைத் தயார் செய்யுங்கள் — 14

ஒவ்வொரு மாதமும் கூடுதலாகச் சேமிக்கவும் — 15

வங்கிக் கணக்கு ஒன்றைத் தொடங்கவும் — 16






# பிரிவு III:
## உங்களையும் உங்கள் பணத்தையும் பாதுகாக்கவும்


அவசரநிலைகளில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் —— 17

உரிமம் பெறாத கடன் கொடுப்பவர்களிடம் கடன் வாங்காதீர்கள் —— 19

இணைய கடன் மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள் —— 20


# பிரிவு IV:
## வெற்றிபெற உங்களைத் தயார் செய்திடுங்கள்


நேர்மறையாகவும் திறந்த மனதுடனும் இருங்கள் —— 22




பகுதி I: உங்கள் இலக்குகளை அமைத்திடுங்கள்

# உங்கள் கனவுகளைக் கற்பனை செய்து பாருங்கள்

உங்கள் கனவுகளை எழுதுவதன் மூலம் தொடங்குங்கள்
உங்களுக்கு உதவ இந்தக் கேள்விகளை நீங்கள்
பயன்படுத்திக்கொள்ளலாம்:

a) வேலை செய்வதற்கு நீங்கள் ஏன் சிங்கப்பூரைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

b) இங்கு பணிபுரிந்த பிறகு நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?

c) நீங்கள் இங்கு எவ்வளவு காலம் வேலை செய்ய விரும்புகிறீர்கள்?

d) எதிர்காலத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் என்ன வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

எங்கு தொடங்குவது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், ஒரு கனவுப் பலகையை உருவாக்கவும்! இது உங்கள் எதிர்காலத்தைச் சித்தரிக்க உதவும்.



# S.M.A.R.T. இலக்குகளைத் தேர்ந்தெடுக்கவும்

நீங்கள் S.M.A.R.T இலக்குகளை நிர்ணயித்துக்கொண்டால் உங்கள் கனவுகளை அடைவதற்கான சிறந்த வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்.

அடுத்த 2, 5 அல்லது 10 ஆண்டுகளில் நீங்கள் அடைய விரும்பும் 3 இலக்குகளைத் தேர்வுசெய்ய கீழேயுள்ள விளக்கப்படத்தைப் பயன்படுத்தவும்.

**திட்டவட்டமானது**
*நான் எதை அடைய விரும்புகிறேன்?*

**அளவிடக்கூடியது**
*இந்த இலக்கை அடைந்துவிட்டேன் என்பதை நான் எப்படி அறிவேன்?*

**அடையக்கூடியது**
*இந்த இலக்கை நான் எப்படி அடைய முடியும் ?*

**பொருத்தமானது**
*இந்த இலக்கை அடைவது பயனுள்ளதா?*

**நேர வரையறைக்கு உட்பட்டது**
*இந்த இலக்கை நான் எப்போது அடைய முடியும்?*

உங்கள் S.M.A.R.T இலக்குகளைக் கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள் மற்றும் அவற்றை அடைய உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைக் கணக்கிடுங்கள் உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், தேவையான பணத்தின் அளவை நீங்கள் உத்தேசமாக எழுதிக்கொள்ளலாம்.

| **இலக்கு** | **நேரம் (2,5, அல்லது 10 ஆண்டுகள்)** | **தேவைப்படும் பணம்** |
|---|---|---|
| *அவசர சேமிப்பு நிதி* | *2 ஆண்டுகள்* | [illegible] |
| *மகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்துவது* | *2 ஆண்டுகள்* | [illegible] |
| | | |
| | | |
| | | |
| | | |

இலட்சியத்துடன் இருங்கள் அதே சமயம் யதார்த்தமாகவும் இருங்கள்! உங்களுக்கான மிக முக்கியமான இலக்குகளைத் தேர்ந்தெடுங்கள், ஆனால் அவை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



# உங்கள் மாதாந்திர சேமிப்பு இலக்கை அமைத்திடுங்கள்

2, 5 அல்லது 10 ஆண்டுகளில் உங்கள் எதிர்கால இலக்குகளுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள், உங்கள் மாதாந்திர சேமிப்பு இலக்கை அமைக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்கள்.

ஒவ்வொரு மாதமும் நீங்கள் இந்த இலக்குத் தொகையையே சேமிப்பதற்கு இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.



*உதாரணங்கள் :*

| S.M.A.R.T. **இலக்கு** | **நேரம்** | **வருடாந்திர சேமிப்பு இலக்கு** | **மாதாந்திர சேமிப்பு இலக்கு** |
|---|---|---|---|
| *மகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்துவது* Ụ̇ ï í | ó’ஆண்டுகள் | Ụ̇ ï í ’ř’ó’ ஆண்டுகள் Ả’Ụ́ü; í | *Ụ́ü; í ’ř’ï’ó’ மாதங்கள்* Ả’Ụ́ü í |
| *நிலம் வாங்க* Ụ́ú í í í | ώ’ஆண்டுகள் | Ụ́ú í í í ’ř’ώ ஆண்டுகள் Ả’Ụ́ï í í | *Ụ́ï í í ’ř’ï’ó’ மாதங்கள்* Ả’Ụ́ώí |
| *கோழி பண்ணை ஒன்றைத் தொடங்குங்கள்* Ụ́üó í í | ï í ’ஆண்டுகள் | Ụ́üó í í ’ř’ï í ஆண்டுகள் Ả’Ụ́üó í | *Ụ́üó í ’ř’ï’ó’ மாதங்கள்* Ả’Ụ́ï í |
| | | | **மொத்தம்** *Ả’Ụ́ï ώí* |

உங்கள் நீண்ட கால இலக்குகளை மாதாந்திர சேமிப்பு இலக்குகளாகப் பிரித்துக் கொண்டால், உங்கள் கனவுகளை அடைவது இலகுவானது என்பதை உணர்வீர்கள்!

## பகுதி II: சேமிப்பைத் தொடங்க திட்டத்தை தயார் செய்யுங்கள்




இப்போது நீங்கள் உங்கள் மாதாந்திர சேமிப்பு இலக்கை நிர்ணயித்துள்ளீர்கள், உங்கள் அடுத்த கட்டம் அதிகமாகச் சேமிப்பதற்கும் குறைவாகச் செலவழிப்பதற்கும் திட்டமிடுவதாகும்!

# உங்கள் “தேவைகள்” மற்றும் “விருப்பங்கள்” ஆகியவற்றை அறிந்து கொள்ளுங்கள்

எந்தச் செலவுகள் “தேவைகள்” எவை “விருப்பங்கள்” என்பதை அறிந்துகொள்வது, நீங்கள் எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவும்.



**“தேவை” என்பது நீங்கள் வாழவும் செயல்படவும் தேவையான ஒன்று.**

*எ.கா. உங்களுக்கான உணவு, ஒப்பனைப் பொருட்கள் மற்றும் உடல்நலத்திற்குகந்தப் பொருட்கள்*

*எ.கா. உங்கள் குடும்பத்தின் மருத்துவ செலவுகள்*

**“விருப்பம்” என்பது நல்லதாக இருக்கும், ஆனால் அவசியமாக இருக்காது.**

*எ.கா. கைப்பைகள், நகைகள் அல்லது மேலும் ஒரு ஜோடி காலணிகள்*

*நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு வெள்ளியும் நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்தப் பணம், எனவே அதை புத்திசாலித்தனமாகச் செலவிடுங்கள். அதிக செலவு செய்வது நிதி சிக்கல்களையும் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தும்.*

# உங்கள் செலவினங்களின் பதிவை வைத்திருங்கள்



உங்கள் செலவினங்களின் பதிவை வைத்திருப்பது உங்கள் பணம் எதற்காகச் செலவிடப்படுகிறது என்பதை அறிய உதவும், மேலும் இது உங்களுக்கு அதிகமாகச் சேமிக்க உதவும்.

எளிமையான அட்டவணை ஒன்றைப் பயன்படுத்த தொடங்கவும் - இதை நீங்கள் ஒரு குறிப்பேட்டிலோ அல்லது உங்கள் கைப்பேசியிலோ செய்யலாம்.

*உதாரணங்கள்:*

| தேதி | விவரிப்பு | விலை | தேவையா அல்லது விருப்பமா? |
|---|---|---|---|
| *1 பிப்ரவரி* | *புதிய காதணிகள்* | Ụ́i í | *விருப்பம்* |
| *7 பிப்ரவரி* | *கட்டணம் நிரப்பப்பட்ட அட்டைகளில் பணம் போடுவது* | Ụ́ó í | *தேவை* |
| *14 பிப்ரவரி* | *புதிய கைப்பை* | Ụ́ó í | *விருப்பம்* |
| *21 பிப்ரவரி* | *பேருந்து கட்டணம்* | Ụ́ó | *தேவை* |




**உங்கள் செலவினங்களைக் கண்காணிக்கத் தொடங்க 27 பக்கத்தில் உள்ள நடவடிக்கைத் தாளைப் பயன்படுத்தவும்.**

உங்கள் செலவு அட்டவணையைப் பார்த்து உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: நீங்கள் அதிகமாக பணம் செலவு செய்கிறீர்களா? உங்களுடைய “விருப்பங்களுக்கு” நீங்கள் நிறைய செலவு செய்கிறீர்களா? இது உங்கள் S.M.A.R.T இலக்குகளை எவ்வாறு பாதிக்கிறது ?

*நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், முதலில் உங்கள் தேவைகளுக்குப் பணம் செலுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் மற்றும் உங்களுக்குக் கட்டுபடியாகக்கூடியதற்கு மட்டுமே செலவிட வேண்டும்.*

# வரவுச்செலவுத் திட்டத்தை உருவாக்குங்கள்

வரவுச்செலவுத் திட்டம் என்பது ஒவ்வொரு மாதமும் நீங்கள் எவ்வளவு பணம் பெறுகிறீர்கள் மற்றும் எவ்வளவு பணத்தை உங்களால் செலவழிக்க முடியும் என்பதைக் கண்காணிக்க உதவும் செலவிடுவதற்கான ஒரு திட்டமாகும்.





முதலில், நீங்கள் பின்வருவனவற்றை புறநிலையாக மதிப்பிடுங்கள் :

**வருமானம்**
உங்கள் சம்பளம் மற்றும் ஓய்வு நாள் இழப்பீடு

**பணம் அனுப்புதல்**
வீட்டிற்கு எவ்வளவு அனுப்ப வேண்டும்

**மாதாந்திர சேமிப்பு இலக்கு**
உங்கள் இலக்குகளை அடைய எவ்வளவு சேமிக்க வேண்டும்

பின்னர், உங்கள் இருப்புத் தொகையைக் கணக்கிட கீழே உள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தவும். ஒவ்வொரு மாதமும் செலவழிக்க உங்களுக்குக் கிடைக்கும் தொகை இதுவாகும்.

| $________ | - | $________ | - | $________ | = | $________ |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | | பணம் அனுப்புதல் | | மாதாந்திர சேமிப்பு இலக்கு | | மீதமுள்ள தொகை |

*உங்களால் முடிந்தவரை வரவுச்செலவுத் திட்டத்தைப் பின்பற்ற பாருங்கள்! நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், ஒரு மாதம் சேமித்து, அடுத்த மாதம் முழுவதும் செலவழிப்பது சேமிப்பு அல்ல.*

# ஒவ்வொரு மாதமும் கூடுதலாகச் சேமிக்கவும்

பின்வரும் எளிதான சேமிப்பு உதவிக்குறிப்புகளில் சிலவற்றை முயற்சிக்கவும்:

1. உங்கள் சேமிப்பு அதிகரிக்கிறதா என்பதைப் பார்க்க உங்கள் மாதாந்திர பதிவுகளைச் சரிபார்க்கவும் உங்கள் சேமிப்புகள் அதிகரிக்கவில்லையென்றால், உங்கள் “விருப்பங்களுக்கு” நீங்கள் செய்யும் செலவுகளைக் குறைக்கவும்.

2. ஓய்வு நாளில் நீங்கள் வெளியே செல்லும்போது, நீங்கள் செலவழிக்க விரும்பும் பணத்தை மட்டும் கொண்டு செல்லுங்கள்

3. அதிக வட்டியுடன் கூடிய தவணைத் திட்டங்களில் பொருட்களை வாங்காதீர்கள் அல்லது “இப்போது வாங்குங்கள் பிறகு பணம் செலுத்துங்கள்” என்ற முறையிலும் வாங்காதீர்கள், ஏனெனில் நீங்கள் செலவழிக்க வேண்டியதை விட அதிகமாகச் செலவழிப்பீர்கள்.

4. உங்கள் சேமிப்பைப் பணமாக வைத்திருப்பதைவிட வங்கிக் கணக்கில் வைத்திருக்கவும். அப்போதுதான் நீங்கள் அதை செலவழிப்பதற்கான வாய்ப்புக் குறைவாக இருக்கும்.




*மனந்தளராதீர்கள்! ஒவ்வொரு மாதமும் உங்கள் இலக்குகளை அடையவில்லை என்றால் பரவாயில்லை அடுத்த மாதம் அதிகமாகப் பணம் சேமிக்க கடினமாக உழைத்து சேமிப்பதைத் தொடருங்கள்.*

# ஒரு வங்கிக் கணக்கைத் துவக்கவும்

உங்களுக்கு இன்னும் வங்கிக் கணக்கு இல்லையா? உங்களால் இப்போது POSB ஊதியக் கணக்கை இணையத்தில் குறைந்தபட்ச வைப்புத்தொகை இல்லாமல் தொடங்க முடியும்.

ஒரு வங்கிக் கணக்கு உங்களுக்குப் பின்வரும் நன்மைகளை வழங்குகிறது:

- உங்கள் சம்பள பதிவுகளைப் பார்க்கலாம்.
- மின்னிலக்க சேவைகள் மூலம் உங்கள் சம்பளத்தை எளிதாக நிர்வகிக்கலாம்.
- எப்போது வேண்டுமானாலும் உங்கள் சம்பளத்தை வீட்டிற்கு அனுப்பலாம்.
- உங்கள் செலவினங்களை எளிதாகக் கண்காணிக்கலாம்.
- வட்டி பெற உங்கள் சேமிப்பைப் பாதுகாப்பான இடத்தில் வைக்கலாம்.




வேலை அனுமதி வைத்திருப்பவர்களுக்கான POSB ஊதியக் கணக்கு | POSB சிங்கப்பூர்



பகுதி III: உங்களையும் உங்கள் பணத்தையும் பாதுகாக்கவும்

# அவசரநிலைகளில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

உங்கள் அன்புக்குரியவரின் மருத்துவக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அவசரமாக வீட்டிற்கு பணம் அனுப்ப வேண்டியிருக்கும் போது, எதிர்பாராத சூழ்நிலைகளுக்குத் தயாராவதற்கு அவசரகால சேமிப்பு நிதி ஒன்றை வைத்திருங்கள்.

உங்கள் அவசரகால சேமிப்பு நிதியானது 3 முதல் 6 மாதகால மாதாந்திர வாழ்க்கை செலவுத் தொகைக்கு ஈடானதாக இருக்க வேண்டும். உங்களிடம் இன்னும் அவசரகால சேமிப்பு நிதி இல்லை என்றால், அதை உங்களின் முதல் S.M.A.R.T. சேமிப்பு இலக்காக மாற்றுங்கள்.

போதுமான சேமிப்பை வைத்திருப்பது நீங்கள் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்க்க உதவும். உங்களுக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டு, உங்களிடம் போதுமான சேமிப்பு இல்லை என்றால், இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கான வழிகளைப் பற்றி விவாதிக்க உங்கள் முதலாளியிடம் பேசுவதைக் கருத்தில் கொள்ளவும்.



நிதி விஷயங்களில் உங்களுக்கு ஆலோசனை தேவைப்பட்டால், நீங்கள் பின்வரும் நிறுவனங்களையும் அணுகலாம் :

| **அமைப்புகள்** | **இணையத்தளம்/ மின்னஞ்சல்** | **உதவி தொலைப்பேசி எண்** |
|---|---|---|
| அப்துல்லா வாழ்க்கை ஆலோசனை | www.adullam.org.sg | 6659 7844 |
| Arise2care சமூக சேவைகள் | www.arise2care.sg | 6909 0628 |
| பிலெஸ்ட் கிரேஸ் சமூக சேவைகள் | www.bgss.org.sg | 8428 6377 |
| ஒன் ஹோப் நிலையம் | www.onehopecentre.org | 6547 1011 |




# உரிமமில்லாமல் கடன் கொடுப்பவ-ர்களிடமிருந்து கடன் வாங்காதீர்கள்

உரிமம் பெறாத கடன் கொடுப்பவர் (சிங்கப்பூரில் “ஆ லாங்” அல்லது கடன் சுறா என அழைக்கப்படுவார்). அதிகாரபூர்வ அலுவலகம் அல்லாத கடன் வழங்க அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக பணம் சட்டவிரோதமாக கடன் கொடுக்கும் ஒரு நபர் அல்லது நிறுவனத்தைக் குறிக்கிறது.

அவர்கள் பொதுவாக மிக அதிக வட்டி விகிதங்களைக் வசூலிக்கிறார்கள் அதனால் நீங்கள் உங்கள் கடன்களை செலுத்துவது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும்.உங்கள் கடனை அடைக்க முடியாவிட்டால் நீங்கள் துன்புறுத்தவும் அச்சுறுத்தவும் படலாம் .
உரிமம் பெறாத கடன் கொடுப்பவர்களிடம் கடன் வாங்கி உங்களை அல்லது உங்கள் முதலாளி மற்றும் அவரது குடும்பத்தை ஆபத்தில் ஆழ்த்தாதீர்கள்.

**உங்களுக்குத் தெரியுமா?**

உரிமம் பெறாத கடன் கொடுப்பவர்களிடம் கடன் வாங்கினால், உங்களின் பணி அனுமதி இரத்துச் செய்யப்படும், மேலும் சிங்கப்பூரில் எதிர்காலத்தில் வேலை செய்ய தடை விதிக்கப்படும்.

**உரிமம் பெறாத கடன் கொடுப்பவர்களை அடையாளம் காண உதவும் பின்வரும் அறிகுறிகளைக் கவனியுங்கள்.**

- குறுஞ்செய்திகள், தொலைபேசி அழைப்புகள் அல்லது சமூக ஊடக தளங்கள் மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன.
- கடன் பரிவர்த்தனை அங்கீகரிக்கப்பட்ட வணிக இடங்களில் அல்லாமல் இணையத்தில் செய்யப்படுகிறது.

# கடன் மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்



கடன் சேவை வழங்கும் SMS அல்லது வாட்ஸ்அப் செய்தியை நீங்கள் பெற்றால், கடனைச் செலுத்துவதற்கு முன், ஒரு தொகையை வைப்புத் தொகையாகக் கொடுக்க சொன்னால், அது கடன் மோசடியாக இருக்கலாம்.

கடன் மோசடிகளுக்கு ஆளாகாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மோசடிகளுக்கு எதிராகச் செயல்படுவோம்!

*உங்கள் கைப்பேசியில் ScamShield செயலியைப் பதிவிறக்கம் செய்வதன் மூலம் பாதுகாப்பு அம்சத்தைச் **சேர்க்கவும்**.*

கேள்விகள் கேட்பதன் மூலம் சாத்தியமான மோசடி அறிகுறிகளைக் கண்டறியவும். தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பணப்பரிமாற்றங்கள் மற்றும் இணையவழி பட்டியல்களின் மற்றும் விமர்சனங்களின். சட்டப்பூர்வமான தன்மை ஆகியவற்றின் உண்மையைச் சரிபார்த்தல்,

- அத்தகைய கடன் விளம்பரங்களை புறக்கணிக்கவும். இந்த செய்திகளுக்கு பதிலளிக்க வேண்டாம்.
- கடன் சம்பந்தமான வாட்ஸ்அப்பில் விளம்பரங்களை தடுக்கவும் புகார் செய்யவும்.
- உங்கள் தனிப்பட்ட தகவல்களை உங்கள் வங்கி கணக்கு தகவல்கள்அல்லது பாஸ்போர்ட் எண் யாருக்கும் கொடுக்க வேண்டாம்.

ScamShield செயலியில் புகாரளிப்பதன் மூலமோ அல்லது போலீஸிடம் புகாரைப் பதிவு செய்வதன் மூலமாகவோ மோசடி சம்பவங்களைப் பற்றி அதிகாரிகள் மற்றும் பிற சக இல்லப் பணிப்பெண்களிடம் **கூறவும்**.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால், 1800 722 6688 என்ற எண்ணில் மோசடி எதிர்ப்பு அவசர தொலைப்பேசி சேவையை அழைக்கவும்.

ScamShield என்னும் கைப்பேசி செயலி நமது கைப்பேசி எண்கள் மூலம் மோசடி செய்பவர்கள் நம்மை அணுகுவதைத் தடுக்க உதவுகிறது.

ScamShield ஐ பதிவிறக்கம் செய்ய QR குறியீட்டை வருடவும் அல்லது இணைப்பைக் கிளிக் செய்யவும்.

*ஆண்ட்ராய்டு* *IOS*

*ஸ்கேம்ஷீல்டு பற்றிய கூடுதல் தகவலுக்கு*
***www.scamshield.org.sg/setup-guide-*** *க்குச் செல்லவும்.*



## பகுதி IV: வெற்றிபெற உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள்

# நேர்மறையாக இருங்கள் மற்றும் திறந்த மனதுடன் இருங்கள்

பணத்தை நிர்வகிப்பதும் அதை பாதுகாப்பாக வைத்திருப்பதும் சவாலானதாக இருக்கலாம். சில சமயங்களில், நீங்கள் ஊக்கத்தை இழக்கக்கூடும் மற்றும் நீங்கள் மனந்தளர்ந்து போகும் அளவிற்கு தடைகளைச் சந்திக்கக்கூடும். இது இயற்கையானது. உங்கள் குடும்பத்தை விட்டு ஒரு புதிய நாட்டிற்குச் செல்வது மற்றும் புதிய வேலையைத் தொடங்குவது கடினமாக இருக்கலாம்.

இருப்பினும், உங்கள் சிந்தனை நீங்கள் வெற்றிபெறுவதற்கான உங்கள் திறனைப் பாதிக்கும், எனவே நேர்மறையாகவும் திறந்த மனதுடனும் இருப்பது உங்கள் இலக்குகளைச் சிறப்பாக அடைய உதவும்.

*நேர்மறையாக இருங்கள்! குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கு நிதியியல் படிப்புகள், நடவடிக்கைகள் மற்றும் ஆதரவை வழங்கும் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களின் பட்டியலுக்கு அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்.*

*ஆர்மியின் எழுச்சியூட்டும் பயணத்தையும், "ஒருபோதும் விட்டுக்கொடுக்காத" மனப்பான்மையையும் பின்பற்றுங்கள், அவள் தன் தடைகளை, தன் கனவுகளை அடைவதற்கான வாய்ப்புகளாக மாற்றுகிறாள்!*

*https://www.aidha.org/tipsandtools/armi/*



| அமைப்பு | இணையத்தளம | தொடர்பு எண் |
|---|---|---|
| ஐடா | www.aidha.org/ | 6341 5287 |
| இல்லப் பணிப்பெண்களை சென்றடையும் கூட்டணி (ADEO) | https://adeo.sg/ | 6304 3482 |
| இல்லப் பணிப்பெண்களு-க்கான நிலையம் (CDE) | www.cde.org.sg | 1800 225 5233 |
| சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண் சங்கம் (FAST) | www.fast.org.sg/ www.facebook.com/FAST.org.sg | 1800 339 4357 |



## நடவடிக்கை 1:
# உங்கள் சொந்த கனவு பலகையை உருவாக்கவும்

(i) உங்கள் அன்புக்குரியவர்களின் புகைப்படங்கள்

(ii) நீங்கள் பயணம் செய்ய விரும்பும் நாடுகள்

உங்கள் அன்புக்குரியவர்களின் புகைப்படங்கள், நீங்கள் பயணிக்க விரும்பும் இடங்களின் பத்திரிகைகளில் இருந்து வெட்டப்பட்டவை அல்லது கையால் எழுதப்பட்ட மேற்கோள்களை ஒட்டலாம். உங்களைச் சேமிக்க ஊக்குவிக்கும் எதுவாகவும் அது இருக்கலாம்!

(iii) உங்கள் கனவு இல்லம்

(iv) உங்களைச் சேமிக்க ஊக்குவிக்கும் எந்த விஷயமும்

## நடவடிக்கை 2:
# உங்கள் மாதாந்திர சேமிப்பு இலக்கை அமைத்திடுங்கள்

| S.M.A.R.T. இலக்கு மற்றும் தேவைப்படும் பணம் | நேரம் | வருடாந்திர சேமிப்பு இலக்கு | மாதாந்திர சேமிப்பு இலக்கு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | மொத்தம் = |

# நடவடிக்கை 3:
# உங்கள் மாதாந்திர செலவினங்களைக் கண்காணிக்கவும்

*அந்த பொருள் "தேவையா" அல்லது "விருப்பமா" என்பதைக் குறிப்பிடவும்* ✓

| தேதி | விவரிப்பு | செலவு | தேவை | விருப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

***ஒவ்வொரு செலவினத்தையும் பதிவு செய்வதை, உறுதிசெய்து கொள்ளுங்கள், தொகை எவ்வளவாக இருந்தாலும் சரி.***

இந்த சிறு புத்தகத்தின் உள்ளடக்கத்திற்கு Aidha வின் மதிப்புமிக்க பங்களிப்பிற்காக சிறப்பு நன்றி. Aidha ஒரு விருது பெற்ற தொண்டு நிறுவனமாகும், இது தங்கள் பணத்தை எவ்வாறு புத்திசாலித்தனமாக நிர்வகிப்பது என்பது குறித்து புலம்பெயர்ந்த வீட்டுப் பணியாளர்களுக்கு (MDWகள்) வகுப்புகளையும் இலவச பயிற்சிகளையும் நடத்துகிறது.

**MDWகளுக்காக Aidha வழங்கும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாடங்களைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள, www.aidha.org எனும் இணையதளத்தைப் பாருங்கள்.**